கதர்ப்பட்டு உற்பத்தியின் மேம்பாட்டுக்கான சிறப்புத்திட்டம்.

544—வினா எண். 20665—திரு சி. கணேசன் : மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) 1983-84-ல் கதர்ப்பட்டு உற்பத்தியின் மேம்பாட்டுக்காக ஏதேனும் சிறப்புத் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி (அ) ஆம். (ஆ) தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் கதர் பட்டு உற்பத்தி மேம்பாட்டுக்காக 1983-84 ஆம் ஆண்டிற்கான பெருந்திட்டம் ஒன்றைத் தயாரித்து நிறைவேற்றி வருகின்றது.

இதன்படி தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் புதிய பட்டு உற்பத்தி பிரிவுகளைத் தொடங்கவும், புதிய கதர் விற்பனை அங்காடிகளைத் திறக்கவும் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

திரு. சி. கணேசன் : மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 1983–84 ஆம் ஆண்டிற்கான கதர் பட்டு உற்பத்தி மேம்பாட்டுக்காக பெருந்திட்டம் ஒன்றைத் தயாரித்து நிறைவேற்றி வருகின்றது என்று தெரிவித்தார்கள். நான் அவர்களை கேட்டுக்கொள்ள விரும்புவது இந்த மேம்பாட்டுத் திட்டம் செய்து முடித்தப் பிறகு 1983—84 ஆம் ஆண்டில் இந்தத்துறைக்கு எந்த வகையில் செலவுகள் ஆனது ? எவ்வளவு அதிலே லாபம் கிடைத்தது என்ற குறிப்புகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தருவார்களா என அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கதர் பட்டு விற்பனை கடந்த 5 ஆண்டுகளில் அதிகரித்துள்ளன. அதன் விவரம் பின் வருமாறு :

1979–80-ல் 84 இலட்சத்து 49 ஆயிரம் ரூபாயும் 1980–81-ல் 127.10 இலட்சம் ரூபாயும், 1981–82-ல் 179.54 இலட்ச ரூபாயும், 1982-83—ல் 189.83 இலட்ச ரூபாயும், 1983—84—ல் 272.59 இலட்ச ரூபாய். கடந்த ஆண்டுகளில் கதர் பட்டு விற்பனை அதிகரித்துள்ளன என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவு உற்றன.

குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]